கவிமுளரி

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசம்

கால்கோள் : 2023

25 நவம்பர் 2023



வெளியிடுவோர்:

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்

பேத்தாழை

முளரி 1

இதழ் 2

கவி முளரி®

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசம்

ISSN 3021-6680

கால்கோள் : 2023

Kavi Mulari Magazine

வெளியிடுவோர் :

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம், பேத்தாழை, வாழைச்சேனை.

பதிவு இல: EP/CUL/BAT/VAL/03/69/2023

புதிய ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புகளை அனுப்புவோர் கவனிக்க வேண்டியவை :

- கவிதைகள் மட்டுமே அனுப்பலாம்.
- ஒருங்குறியில் (Unicode font) தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
- படைப்பாளர் படைப்பின் கீழ் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் முகவரியையும் இட்டு அனுப்ப வேண்டும்.
- ஆக்கம் தனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிசெய்தல் அவசியம்.
- புகைப்படம் இணைத்து அனுப்பலாம். (நாகரிகமானதாக இருந்தால் மட்டுமே இணைக்கப்படும்)
- ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதிக்குள் ஆக்கங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- ஒருவர் எத்தனை ஆக்கங்களும் அனுப்பலாம்.
- ஆக்கங்கள் அடுத்தடுத்த இதழ்களில் பிரசுரிக் கப்படும்.
- மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்களே இதழுக்கு ஏற்கப்படும்.

....

ஆக்கங்களை அனுப்ப

editor2023kavimulari@gmail.com

"எழுதுகோல் புரட்சி
எங்ஙனும் எழும்பட்டும்
விழுதென விடுதலை
சமூகத்தில் நிலைக்கட்டும்"

படங்கள் : Google

நற்கவிகளுக்கு

வணக்கம்,

வாழைச்சேனை பேத்தாழையைத் தளமாகக் கொண்டு இயங்கும் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் முயற்சியாகக் 'கவிமுளரி' எனும் கவிதைசார் மின்னிதழ் வெளிவருகிறது.

பிரதேச கவிஞர்களுக்குக் களம் கொடுப்பதும் அவர்களின் எழுத்தாக்க முயற்சிகளுக்குக் கரம் கொடுப்பதும் எமது பிரதான அவா.

அதன்வழியில்,
கன்னி இதழ் வெளிவந்தது. அதற்கு நீங்கள் வழங்கிய ஆதரவிற்கு மேலான நன்றி. தொடர்ந்தும் ஆதரவளிப்பீர்கள் என நம்புகின்றோம்.

இதழில் பங்குபெறும்
கவிஞர்கள் யாவர்க்கும்
வாழ்த்துகள்.

சிலரது கவிதைகள் இடம்பெறாமல் போயிருக்கலாம். அவர்களது கவிதைகள் தொடர்ந்து வரும் இதழ்களில் நிச்சயம் வெளிவரும்.

தொடர்ந்தும் உங்கள்
பேராதரவை வேண்டும்,

உங்கள்,
-இதழாசிரியர்

2023.11.25



முளரியில் வாசம் வீசும் தாதுக்கள்

- இரா.நிதன்
- மு.முபாரக்
- கவித்தோழி சிவநந்தினி
- தாழையூர் யது
- பிள்ளைக்கவி பிரசாந்
- வாகையூர் டிலூக்சன்
- தமிழூராள் அனுஷ்திக்கா
- ரா.பிரேம் சுரேஷ்
- கவிஞர் ரவிகிருஷ்ணா
- மூ.அருளம்பலம்
- வி.அபிவர்ணா
- மீராஸ்ரீ
- மு.அருணகிரி
- திருமதி. யோகினி சுகர்ஷன்
- வாழையூர் நி.நிறோஜினி
- கம்பனின் சீடன் வதுஜன்
- தமிழ்புதல்வன் யேசுசகாயம்
- நவுபர் நபீலா
- கவிஞர் இர்ஷாத்
- வெல்லவூர் சுபேதன்
- மௌன்பனி
- பு.கோ.சத்தியவதனி
- தமிழாதினி கிந்துயா



குரல்...

நான் பேச
மறந்த எத்தனையோ
பொழுதுகள்
இன்றும்
நித்தம் நித்தம்
என்னை
வஞ்சித்துப்
போகின்றன...


ஆதங்கப்பட
நானொன்றும்
அகங்காரம்
பிடித்தவன் இல்லை
அடிமைப்பட
நானொன்றும்
அனாதையும் இல்லை...

அன்று எந்தன்
உணர்வுகள்
சிதைக்கப்பட்டன
நான் துவண்டு
போனேன்
கண்ணீர் விட்டு
கதறியழுதேன்
யாரும்
துணைக்கும்
வரவில்லை
கண்ணீர் துடைக்கவும்
அங்கே
விரல்கள்
ஏதுமில்லை...

அடைத்துப் போன
குரல்வளையை
பிடித்து இழுத்து
இன்று எனக்காக
மட்டுமில்லை
எல்லோருக்காகவும்
பேச ஆரம்பித்தேன்
அதற்கு எந்தன்
பேனை முனையும்
சாட்சி...

போனாக்கள் எல்லாம்
நான் பேச
மறந்ததால்
பொழுதை மறந்தன
இன்றோ
எந்தன் பேச்சுகள்
மட்டுமே
எனக்கு
பொழுதென்று
பிறக்கின்றன...

கவலை மறந்தேன்
கண்ணீர் துறந்தேன்
இன்று சந்தோசப்படுகின்றேன்
காரணம்
நானும் எந்தன்
குரலில்
எங்கும்
ஒலிக்க ஆரம்பித்துவிட்டேன்...



அன்று முடங்கியிருந்தால்
இன்று நான்
வெளிவந்திருக்க
முடியாது
அடக்கிய குரலும்
முடக்கிய விரலும்
இன்று
அச்சப்படாமல்
எழுந்து கதைக்கின்றன
ஏனம் எந்தன்
குரலில் இல்லை
ஏழ்மையும்
அதன் வழியில்
இல்லை...

எந்தன் குரலோடு
எங்கும்
உலாவப் போகின்றேன்
நான் மட்டுமில்லை
என்போன்று
நாதியற்றுப் போன
நபர்களுக்காகவும்...

இரா.நிதன்
மட்டக்களப்பு,
இலங்கை.



என்னிடம் பேசுவதற்கு,
என்னிடம் பேசாமலிருப்பதற்கு,
என்னிடம் சண்டை போடுவதற்கு,
என்னிடம் சமாதானம் செய்வதற்கு,
என்னை அழவைப்பதற்கு,
எனக்கு ஆறுதல் சொல்வதற்கு,
என்னிடம் நெருங்கி வருவதற்கு
என்னிடமிருந்து பிரிந்து போவதற்கு,
என்னைப் பற்றி எழுதுவதற்கு,
என்னைப் பற்றிய நினைவுகளை
அழிக்க நினைப்பதற்கென
எல்லாவற்றிருக்கும் ஒரு காரணம் வைத்திருக்கிறாய்...
காரணங்களையெல்லாம் அழகழகாய் ஜோடித்தாலும்
ஒன்றும் அழகாய் இருந்ததில்லை
உன்னைப் போல்!

-மு.முபாரக்
தமிழ்நாடு.

விதையால் விதி செய்வோம்

பூமியில் வெப்பம்
வன்மத்தைக் கக்குகிறது!
வழிப்போக்கன் ஒருவனை
ஏறிட்டுப் பார்த்த
அறுபட்ட மரமொன்று,
இறுமாப்புடன் கூறியது
நெருங்குண்டு மீண்டால்
என்னையும் மீட்பாயென்று...

பணத்தில் படுக்கை
பட்டினியால் வயிறழுகிறது!
சுவற்றில் வரையப்பட்ட
பச்சைக் கொடி,
ஊதியம் இல்லா
உறக்கம் கேட்பவனிடம்
விழித்தால் முதலில்
விதையை விதைத்திடென்றது...

புழுக்கத்திற்குக் குறைவில்லை
மின்விசிறி சுழல்கிறது!
உண்டெறிந்த விதையில்
உயிர்த்த செடியொன்று
உவர்ப்பு உடலுடன்
உழைபவனிடம் சொன்னது
இப்போதேனும் கன்றுகளை
பெருக்கிக் கொள்ளென்று...


நிழலுக்காக ஒருவன்
வீட்டுக்குள் ஓடுகிறான்!
எழிலுக்கு வைத்த
இறப்பர் மரம்
சிரித்துக் கொண்டே
தன்னுள் பேசியது
நிஜமறியா மூடன்
நிர்க்கதி ஆகிறானென்று...

சிலருக்கு வியர்வை
பலருக்கும் கூதலாயிருக்கிறது!
காய்ச்சலில் வெதும்பியவர்
முன்னால் நிற்கும்
கேசம் உதிர்ந்த
கிளைகள் நகையாடின
என்னைப் பேணாத
உன்னிலையைப் பாரென்று...

உயிர்க்கொல்லிக் கள்வன்
உல்லாசமாகச் சுற்றுகிறான்!
சுவாசிக்கும் வளியும்
விசமாகிப் போக
ஊசலாடும் உயிர்களிடம்
விரக்தியான காற்றுரைத்தது
அழிவது இயற்கையுடன்
நீயும் என்று...

முடிவை வென்றிட
முடிவுகள் இருக்கின்றன!
நடைபாதையிலும் கூட
விதைகளை விதைத்திடுவோம்
நலம் கொண்டதாய்
விதியைப் படைத்திடுவோம்
நாளையப் பொழுதை
மதியால் வென்றிடுவோம்...

-கவித்தோழி சிவநந்தினி
கண்ணகிபுரம்,
வாழைச்சேனை.



கழிந்த காலத்தில் ஒரு காதல்...

பத்தாம் வகுப்பு படிக்கையில்
பள்ளிக்கூடம் நான் செல்கையில்
பாவாடை தாவணியில் அவளும்
என் முன்னே கரை ஒதுங்குவாள்..!

பிறை நெற்றி நடுவிலே
செந்தூரம் அவள் கீறி
நகைக்காமல் சென்றிடுவாள் நெடுவாலி
என் மனம் நோக.!

கற்கண்டு இனிப்பும்
கண் பொத்தி நிற்குமடி
செவ்விதழ் விரியும்
உன் சிரிப்பைக் கண்டு..!

தோழிகள் நடுவினிலே
தோரணமாய்க் கதை பேசி
தலை நிமிர்ந்து என் முகம் பார்த்தாள்..!

பதை பதைத்துப் போனேன்
என் இதய அறை திறந்து
விண் மீன்கள் பறந்து செல்ல ..!

வெட்கத்தில் கார்குழலா(ல்)ள்
அவ்வப்போது வீணை வாசிப்பாள்
அவள் தலை முடி கோதி..!

செந்தாமரை முளரி போன்ற
அவள் பாதம் நடை போட்டு
அங்கும் இங்கும் திரிந்து
என் பார்வையில் விழுந்திடுவாள்
அன்ன நடையாள்..!

அடிக்கடி என் கண் முன் வராதே
என் கண்கள் இமைக்க சற்று நாடியாகிறது

மெத்த நடையாள் வர்ணிப்பில்
மெய்மயங்கி நின்ற என்னை
வாத்தியாரும் கூட்டிச்சென்றார்
பட்டணத்து உயர் கல்விக்கு..!

காதலைப் பூட்டி கனவுப்பைக்குள் வைத்துவிட்டு
காலங்கள் கழிய வெண்தாமரை
முகம் தேடி வண்டெனப் பறந்து வந்தேன்
பின்னங்கால் பிடரியில் அடிபட..!

கட்டவிழ்ந்த காளை போல்
காதலைச் சொல்ல வந்த நான்
காற்றில் கிழிந்த காகிதம் போல்
நின்றதும் ஏனோ..?

கைகளில் இரு குழந்தைகளுடன்
மனை வாசல் திறந்து வந்து
மனக்கதவை உடைத்த என் காதலி நிலை கண்டு
இல்லை
என் முன்னாள் காதலி நிலை கண்டு...!

-தாழையூர் யது
பேத்தாழை, வாழைச்சேனை.



யாவரும் நலம்



உணவும் உறக்கமும் இன்றி
உதயம் இல்லா வாழ்க்கை
நாளும் வாழ்கின்ற
உணர்வுகளற்று கையேந்தி அலையும்
மானிடர் நெஞ்சமும்

முயற்சிகளுக்கு
முட்டுக்கட்டை போட்டு
முன்னேறத் தடையாகும்
முகமூடி மாந்தரும்

பணத்தினால் குணத்தையும்
விலைபேசி விற்கும்
பஞ்சதந்திர முகவரிபெற்று
பஞ்சத்தில் உழல்வோரை வதைக்கும்
உத்தம செல்வர்களும்

கல்வியை மட்டுமே நம்பி
கனவு நோக்கி ஓடும்
ஏழை விதைகளுக்கு
கனதியான துன்பங்களையும்
அவமானங்களையும் கொடுத்து
கைவிட்டு வழிநடத்தும்
கருணையற்ற வழிகாட்டிகளுக்கும்


தற்பெருமையால்
தலைநிமிர்ந்து நடக்கும்
சுயநலவாதிகளுக்கும்

தவறுகளால் தவறுகள்
மறைத்து வாழும்
சாமர்த்திய வாதிகளுக்கும்

இன மதங்களைக்
காரணம் காட்டி
இனவெறிகளை விதைக்கும்
சூழ்ச்சிக்காரர்களுக்குமாகத்
தொடுத்திடும் செய்தி...

நலன்களைக் கொன்று வாழும்
உங்கள் உலகினில் மட்டும்
யாவரும் நலம்...

-பிள்ளைக்கவி பிரசாந்
கிண்ணையூர்.



கல்வி

கானகத்து வரை நடுவே
கனியினிது தேனிருக்க
காளையது வேகம்கொண்டு
துவண்டிடாது முன்னே செல்


பாதை வழி போகும் வேளை
பன்றியினம் வந்து நின்று
தன் வழியே செல்லவென
உன் விதியை மாற்ற வைக்கும்

மந்தியினம் மாலை வேளை
மதிகெட்டு மயங்கி நிற்கும்
மந்தி வழி சென்றிடாதே
உன் மதியும் மழுங்கி விடும்

கனிதனைப் பற்ற முனைகையில்
பறவையினம் கோசமிடும்
கோசதிசை சென்றிடாதே
கொய்யாவும் கிட்டாதே

வண்மையில் மெய்யழகில்
மதி மயங்கி நின்றிடாதே
மானினத்தின் மையல் கண்டு
காதல் வழி சென்றிடாதே

வண்ண வண்ணச் சிட்டுக்களின்
எண்ணமெல்லாம் தேனிருக்க
முந்தியதைப் பருகி நித்தம்
இன்பமழை நனைந்திடுவீர்...!



~வாகையூர் டிலூக்சன்
சின்னத்தட்டுமுனை, வாகரை.

தாவரம் தா வரம்

தமிழூரான் அனுஷ்திக்கா

காற்றோடு சேர்ந்தாடி
இசையோடு கவிபாடி
வெயிலைக் குளிப்பாட்டி
நிழலைத் தாலாட்டி

மழலைத் தொட்டிலாகி
கனிகளின் கடையாகி
பச்சையம் உடையாகி
இலைகளில் இளைப்பாறி

வானம்பாடி வந்தாடி
பகிடி கொண்டாடி
சகபாடி விளையாடி
காற்றாடி நின்றாடி

உவகை வந்தேறி
உலகைக் காப்பாற்றி
பலகை என்றாகி
ஓசோன் ஓட்டையாகி

வெப்பம் தலைக்கேறி
தீவுகள் மூழ்கி
கட்டடங்கள் வானேறி
வயல்கள் பாழாகி

வாழ்வு வெறிதாகி
வாட்டம் துணையாகி
நட்டம் படியாகி
நலஞ் சோர்கையில்


முளைப்பாய் நீ
பெறுமதி கோடி
வரம் தாநீ
தாவரச் சாமி!



விலைகள்

இவளின்
வியர்வையை விருந்துண்ணக் காத்திருக்கும்
கழுகுகள் ஏராளம்.

இவள் முன்
மதங்கள் மண்டியிட
சாதிகள் சட்டையைக் கழற்றிக் கொண்டன.



இவளின்
உடல் என்னும் காகிதத்தில்
ஆண்களின் ஆசைகள் எழுத்துப்பிழைகளாகின.

இவளின்
வாழையிலை வடிவம்
எச்சில் இலையாய் மாறிப்போனது.

இவளின்
இளமை விற்பனைக்கு என்ற அறிவிப்பால்
படுக்கை அறையில் தினந்தோறும் சுயம்வரம்தான்.

இவள்,
ஒருவன் கழுத்துக்கு மாலையாகும் முன்பே
பலரின் உடலுக்குப் போர்வையாகிப் போனவள்.

இவள்
உள்ளத்தை சிதைத்து
உடலை ஊனமாக்கியவள்

இவள்
சிறகினை விற்று
பறக்கக் கற்றுக்கொண்டவள்.

-ரா.பிரேம் சுரேஷ்
தமிழ்நாடு.

பென்சிலிடம் பேசும் பிஞ்சு

ஏன் பென்சிலே
என்னிடம் வர மறுக்கிறாய்?
என் கைகளில் புழுதி
படிந்துள்ளது என்பதாலா?

பக்கத்துவீட்டுப்
பதுமையவள் கைகளிலே
தவழுகின்றாய்

பார்க்கையிலே பரவசம் கொள்கிறேன்
கைகள் பற்றி எழுதிவிட

உன்னை விலைக்கு
வாங்கியெழுத
முடியவில்லை எனக்கு

ஏன்
என் கைகளில்
உன்னை உணரமுடியவில்லை?

அழகான கூர்களிட்டு
வைக்க நினைத்தாலும்,
வர மறுப்பதேன்?
என் காகிதப் பையிருந்து
நழுவி விழுவாயென்ற
பயமுனக்கா?

நான் உண்டியலில்
இட்டுவரும் காசு
மறுக்கிறதே
உன்னை வாங்க

எங்கள் நாட்டுப்
பணப் பெறுமதி
போதாததா
உன்னை வாங்க?

என் அப்பா
போகவிருக்கிறார்
வெளிநாடு

அவரனுப்பும்
பணத்தில் உன்னை
வாங்கித் தருவதாக
அம்மா இன்றும்
சொன்னார்
என்னிடம்

எனக்காக கொஞ்சம்
காத்திருந்து
விலைபோகாமல்

அப்பா கையெடுத்து விட்டார்
கடவுச் சீட்டை
நாளையுனை என்கைகள்
பற்றித்தருவதற்கு...

-கவிஞர் ரவிகிருஷ்ணா
கிரான் குளம் - 07,
மட்டக்களப்பு.

கதிரவன் காசின் காதல்

அழகாதவனின் அரும்பியதோர் முகம் – திகழ
அழகுருவின் அழகிலே லயித்தாள்
அருள்நிறை ஆதவன் அமுதமுகம் – கண்டு
அருளுடை யகத்தினாள் தொழுதாள்
அறிவோடுநிறை அழகாதவமுகம் – தெரிய
அகத்துள்ளே அன்புருவா யடக்கினாள்
அழகொளிபரவ அகிலத்துள்ளொளி – மிளிர
அகவரியணையில் அன்போ டேற்றினானள்

ஆயிழை பூமாதா அழகு கண்டு – மெல்ல
ஆதவனும் மெய் சிலிர்க்க
ஆதவனின் அகமனத்தின் உள்ளே – அன்பு
ஆரணங்காள் மேல் காதலாகி
ஆய்ந்ததோர் பார்வையா லளந்து – மிக்க
ஆர்ப்பரித்து ஆசையது கொள்ள
ஆதியொளி அழகு ஆதவனிவன் – என்று
ஆடகப்பொன் பூவிழி யசைத்தாள்

இளஞாயிறு தன்னெழு கதிர்வீசி – மெல்ல
இன்முகம் காட்டியே எழுந்து
இளமயில் அகத்தே யிடம்பிடிக்க – எண்ணி
இணங்கி இதவொளி வீசிநிற்க
இளம்புவிமகள் இளவிடியல் நாயகனை – ஏற்றி
இரக்கமுடன் இன்முகம் நோக்கி
இளந்தரணி பூமாது இவனழகன் – என்று
இதயக் குவளையிலே ஏற்றிவைத்தாள்

ஈடிணையில்லா இளஞாயிறு எழுந்து – வந்து
ஈட்டியதோர் ஒளிக்கீற் றூடுருவ
ஈதலில்நல் லேந்திழையாள் பூமி – நாணி
ஈரமனமிளகி இனிய வாழ்த்துரைக்க
ஈறிலானாய் ஈர்ந்தவிள மொளி – தாவி
ஈர்மையோடு இளந்தரணி தழுவ
ஈடேற்றம் இவராலுண்டு என்று – எண்ணி
ஈடுகொடுத் தேற்கவிசைந்தாளே பூமி

உலகாள்கதிரோன் உரிமை உணர்வோடு – படர
உள்நிறை கனவால் உள்ளந்தேற்றினாள்
உணர்வோடு உதய சூரியன்ஒளி – சிந்த
உழுதநற் புவித்தாய் உளமாறவேற்றாள்
உதயத்துச்சூரிய உயிர்ப்பான ஒளி – கண்டு
உள்ளவுறைக்குள் உரிமையோ டேற்றாள்
உலகாளு ஞாயிறுவின் ஒளிமுகம் – நோக்கி
உளம்மகிழ்ந் துணர்வு இழந்தாள்

செங்கதிரோன் செங்கதிர்கள் புவியாளில் – பரவ
செங்காந்தளாய்ச் சிரித்தா ளவள்
பொற்கதிரவன் பொன் வதனம் – தழுவ
பொங்கழகால் புவி பூத்திருந்தாள்
பொன்னிறவாதவன் புவிநோக்க – பூத்த
பொற்கொடியாள் புன்னகை பூத்தாள்
பொன்னிறத்து வேந்தன் பொற்கதிர் – உமிழ
புவிப்பூவை புன்னகை பூத்திருந்தாள்.

ஏழ.அருளம்பலம்
[ஆரையூர் அருள்]

எங்கள் தாயகம்

–வி.அபிவர்ணா
ஈழம்
[முல்லைத்தீவு]

எங்கள் தாயக மண்ணின் அழகை
சொல்லிடச் சொல்லிடச் சுகந்தான் எமக்கு
எங்கள் தாயக வாழ்வின் பெருமையை
எழுதி ஏற்றிட உவகைதான் எமக்கு

நீலக்கடலின் குளுமையும் நிலத்தை வெல்லும்
படகுக்குழந்தைகள் அதன்மீது தாவிச் செல்லும்
கடலில் வாழும் மீனினம் பாய்ந்துதுள்ளும்
அலைகளின் பாடலும் மனதை வெல்லும்

காண்பதற் கினிய கலைநயக் காட்சி
தென்னை மரங்களின் பசுமையின் மாட்சி
ஒன்றாய்ச் சேர்ந்து குலுங்கிடும் காட்சி
ஆஹா! அருமை அதைவிடவா இனிமை

பச்சைப் போர்வை வயல்கள் கீழே
நீலக் குடையாம் வானம் மேலே
மூங்கில் ஊடாய்த் தென்றல் இசைக்க
எட்டுத் திசைக்கும் கொட்டும் அழகே

தென்னையின் கீற்றின் வழியே வந்த
கட்டில் கூடை தொட்டில் முதலாம்
சொர்க்கத்தின் மறுபெயர் எங்கள் தாயகம்
என்றிட மறுப்பவர் யார்தான் இங்குளர்?

எமக்கிந்த சொர்க்கம் ஒன்றே போதும்
நன்றாய் வாழ்ந்து உயர்வோம் நாளும்
உலகினில் வாழும் மனிதரே கேளீர்!
எங்கள் தாயகம் எங்கள் உயிரே!

காதல் சொல்ல வந்தேன்

-மீராஸ்ரீ
தமிழ்நாடு.

கடந்து சென்றாய்
கல்லூரி வாசலில்
நேருக்கு நேரன்று
நிமிடத்தில் மோதியது
காமன் கணையொன்று
கணநேர மின்னலாய்
அந்த நொடியில்
தன்வசம் இழந்தேன்

ஆயிரம் இதழுடைத் தாமரைமலரோ
அன்றலர்ந்த ரோசாப்பூவோ
கண்டதும் மலர்ந்தேன்
கண்ணிமைக்க மறந்தேன்
பெண்ணுந்தன் பேரழகில்
பெருமயக்கம் கொண்டேன்
பேசிட முனைந்தேன்

கன்னியுந்தன் மனதினில்
காதலைப் புகுத்திட
இயன்றிடும் போதெல்லாம்
ஏதேதோ தடைகள்
எண்ணங்கள் யாவும்
நீயே ஆக்கிரமிக்க
துணிந்தே இன்று
காதலை உரைத்தேன்

சொன்னதும் முகமலர்
நாணத்தால் மறைத்தாய்
செவ்விதழ் அழுந்த
பற்களால் கடித்தாய்
இப்போது புரிந்தது
உனக்கும் என்னுணர்வே.




உன்னிடமிருந்து வரும்
வார்த்தைகளைச்
சுள்ளி பொறுக்கும்
பறவையாய்ச் சேகரிக்கிறேன்
கூடுடைந்ததும்
கனவுகளுக்குள் நுழைந்து
மின்மினிப் பூச்சிகளின்
வெளிச்சத்தில்
வாசிப்பதற்கு.....



மு.அருணகிரி
அவனியாபுரம், தமிழ்நாடு.

கலங்கும் கண்கள்



பிழை அறியாப் பேதை இவள்
பிதற்றி அழக் காரணம் என்னவோ...?
காதலித்த மணவாளன் கைபிடித்த நன்நாளில்
கண்ட கனா அத்தனையும் பொடியானதென்னவோ?


ஈரைந்து மாதம் கருச்சுமக்காக் கன்னியிவள்
இருந்தென்ன பயனென்று இறக்கப் போனாளோ?
உனையின்றி யாருமில்லை நீயே தஞ்சமென
உலகாளும் அன்பால் கலங்கிய கண்கள்.

திருமதி. யோகினி சுகர்ஷன்
திருநாவற்குளம்,
வவுனியா.

நற்குணம் கொண்ட ஆண்களுக்கு

-வாழையூர்
நி.நிரோஜினி.

ஆண்கள் அனைவரும்
தவறானவர்கள் இல்லை..
இயற்கையின் உன்னதமான
படைப்பில் ஆண்களும் ஒன்றே..
ஆணின் அழகு அவன்
அகத்திலே உள்ளது..
இருள் விலக்கி ஒளியைக் கொண்டுவரும்
கதிரவனைப் போல்
பிறர் வாழ்வில் வறுமை போக்கி
தீபம் ஏற்றுபவனே ஆண்மகன்...
தன் ஆசைகளை துறந்து
இளமையை அடகுவைத்து
வெளி நாடுகளில் உழைக்கும்
ஆண்கள் அற்புதமானவர்களே...!
முரடனாகத் தோன்றினாலும்
மலரில் மறைந்துள்ள
வாசம் போல,
அவனுள்ளும் மென்மை உண்டு..
பலசாலி மிக்க ஆடவன்
மழலையைக் கரங்களில் ஏந்த
பயம் கொள்ளும் குழந்தையவன்...
தாயை மதிக்கும் ஒவ்வொரு
ஆண்களும் பெண்மையைப்
போற்றுபவர்களே...
அனுதினமும் தன்னைப் பற்றி
சிந்திக்காத அதிசயமான
பிறவிதான் அவர்கள்..
அவர்களைப் புரிந்தவர்க்கு வரம்
புரியாதவர்க்கு புதிர் வனம்...!





தட்டிடத்திறக்கும் கதவுகளாய் மெட்டும்போடுகிறது நினைவுகள்
எட்டிப்பிடிக்க முடியாத தூரம் தட்டுத்தடுமாறி சென்றுவிட்டேன்
கொட்டும் மழையென முழுதுமாய் என்பருவம்
தொட்டும் பார்க்காத துறவியாய்த் தொலைத்து விட்டேன்

இறப்பின்றிய இயற்கையது உயிர்ப்பனவாய் நிற்கிறது
பிறப்பூன்றிய மானிடமோ பல இழப்பனவாய் மறைகிறது
கனதியான நினைவுகளோ கனவினிலே கரைகிறது
காண நினைத்த இளமையதோ சிறு சிட்டாய்ப் பறக்கிறது

கண்ணிழந்த ஓவியனாய்க் கானல் நீரும் தேடுகிறேன்
நாணிழந்த நாரதனாய் என் இளமை பாடுகிறேன்
விடிவழகை இரசிக்காமல் மறைபொழுதைத் தேடிவிட்டேன்
செல்லும் வழி அறிந்ததனால் வந்த வழி மறந்துவிட்டேன்

ஓடோடி வந்தாலும் மனம் விட்டுச் சென்றிடுமோ
ஓரப்பார்வை ஒன்று அதில் உதித்ததுவே ஒருதலைக் காதலே
சின்னச்சின்னச் செல்வங்களாயச் செதுக்கிவைத்த காலமது
மெல்லச் சென்ற பிறகுமது மிதக்கிறதே காற்றலையாய்

அள்ளிக்கொண்ட ஆனந்தமும் எண்ணிலடங்கா ஆசைகளும்
என்னுள்ளே சுமக்கின்றேன் தாய்ப்பாசமும் மறக்கின்றேன்
சொல்லச் சொல்லக் கண்ணீரும் கண்ணோரம் உதிக்கிறதே
என்ன சொல்ல அந்தக்காலம் இன்னும் அகம் கேட்கிறதே.

பணிந்தே உயர்வாய்

தற்புகழ் இன்றியே தரணியை வென்றிடு
சிற்பமாய் மாறியே சிதமாய் ஒளிர்ந்திடு
அஃகலில் வாழ்ந்துமே அவனியை அறிந்திடு
அஃதையாய் மாறிடும் அமயமும் வந்தாலும்
தரணியில் நீயும் தாழ்ந்தே நடந்திடு
வையகம் தன்னை வாழ்ந்தே வென்றிடு
அருஞ்சிறை செய்திடும் ஆலவாய் முன்னே
அருக்கனாய் நின்றே அல்கல் செய்திடு
இகலினைக் கொண்டே இகவனை வென்றிடு
புகழைக் கண்டும் பூமியில் தாழ்ந்திடு
தூற்றும் உலகம் துணிந்தே எதிர்த்திடு
காற்றும் உன்னை கண்டே பணிந்திடும்
அன்பைக் கொடுத்தே அவனி வென்றிடு
உன்னையே நீயும் உலகினில் அறிந்திடு
சாதனை மனிதனாய்ச் சரித்திரம் படைத்திடு
பாதகர் முன்னே பவனியும் சென்றிடு
தரணியில் நீயும் தாழ்ந்தே இருந்திடு
வையகமும் வானகமும் உன்னைப் புகழ்ந்திடவே.



-பாரதி மைந்தன்.

காதல்

உணர்வுகள் வழியே உறவுகள் படிக்கும்
உணவுகள் போலே உள்ளத்தில் இனிக்கும்
உண்மையால் தினம் உள்ளத்தை வடிக்கும்
கண்களின் வாய்மொழி கசடற்ற காதலே

உள்ளத்தில் சுரந்து உணர்வாய் எழுந்து
கள்ளமே இல்லாக் கனிவைத் தந்து
துள்ளும் காதல் தூய பாலாய்ப்
பள்ளம் அதனைப் பாங்காய் மறைக்குமே

என்பிலா இதயத்துள் இருக்கின்ற இருளினை
அன்பெனும் அருளொளி அழித்து அகற்றுமே
துன்பமும் தோல்வியும் துளியு மில்லையே
நண்பகல் மட்டும் நல்லிருள் இல்லையே

வாடிய பயிரால் வாடிய வள்ளலார்
வாடிய மனிதரில் நட்பளித்த தெரசா
ஓடிய தேரை உவந்தநல் பாரி
கூடியே அளித்தனர் குவலயத்திற் கன்பையே



அன்பின் முழக்கத்தால் அகிலம் சிறக்குமே
இன்பம் நிலைத்திட இதயம் மணக்குமே
என்றும் வாழ்வில் ஏற்றம் நிலைக்குமே
அன்பு நிறைந்தால் அனைத்தும் வளப்பமே.

❖❖❖❖❖

-தமிழ்புதல்வன்
கந்தலிங்கம் யேசுசகாயம்
கிரான்.



அவளின் உலகம்

உனக்கானவளாய் உன்னில்
ஒத்திகை பார்க்காமலே
ஒருத்தியாய் ஒன்றிடுவாள்

உன் உறவுகளைத் தனதாக்கி
உடைமைகளை உணர்வாக்க
உரிமையோடு போராடிடுவாள்

அயலவர்கள் ஆயிரம் சொல்ல
ஆத்திரம் அலை மோத
அழகாய்க் கடந்துசென்றிடுவாள்

பார்ப்போர் பாவமாய்ப் பார்க்க
பதில் சொல்ல திராணியற்று
பண்பாய்ப் புன்னகைத்திடுவாள்

தன் ஆசைகளைப் புறந்தள்ளி
உயிராய்ப் பெற்றெடுத்த
மகவைச் சிறக்க வைத்திடுவாள்

உன் அன்பைப் பெறவே
உன் பாதம் வரை தொட்டு
பணிவிடை செய்திடுவாள்

எதிர்பார்ப்பு உன்னில் வைத்து
ஏமாந்த இதயம் மறைத்து
இனிதாய் உறவாடிடுவாள்

மொத்தமாய் உனக்கே ஆனவள்
உறவுகள் அனைத்தும் இருந்தும்
அனாதையாய் வாழ்ந்திடுவாள்

பார்க்க முழுமையாகத் தெரிந்தாலும்
தனிமையைத் தனக்குத் துணையாகக்
கொண்டே வருந்துபவள் அவள்.

-நவுபர் நபீலா
குருநாகல்.

→→→→கஸல் திரிகள்←←←←

-கவிஞர் இர்ஷாத்,
வாழைச்சேனை.

கடவுளின் முகவரி
தேடினேன் கிடைத்தது
காதல்.

* * *

இறப்பதற்கு முன்
நான்
பிறக்க வேண்டும்
உன் மணாளனாக.

* * *

நீயே
அகிலத்தின் அந்தாதி
உன்னில்
தொலைந்த என்
இசையைத்
தேடுகிறேன்.

* * *

உன்னைத்
திருமணஞ் செய்வதும்
அந்த மரணத்தைத்
திருமணஞ் செய்வதும்
ஒன்றுதான்
உன்னோடு நான்
வாழ முடியாது
மரணித்தாலும்
வாழ முடியாது.

* * *

என் பார்வைக்கு
அகப்படவேயில்லை நீ
வழிப்போக்கனாய்
உன்னைத் தேடி...

* * *

நெருக்கடியில்
நானிருக்கிறேன்
என்னிலை தீர்ந்ததும்
வா.

* * *

என் மனக்கொடி
உன்னில் படரத்துடிக்கிறது
வழியில்
பாரிவேந்தனைக் கண்டால்
சொல்லி விடு.

* * *

இருளை மொழிபெயர்க்கப் பரிதி
என்னை மொழிபெயர்க்க
நீ.

* * *

எந்தச் சிலுவைக்கும் பிறைக்கும்
சக்கரத்துக்கும்
நம் காதலை
அடைமானம்
வைத்து விடாதே.

* * *

மரணம் எப்போதும் வரலாம்
வா இருவரும் வாழ்ந்து
எல்லோரையும் அழவைக்கும்
அதனை அழவைப்போம்.

* * *

கேள்வியிலும் நீயில்லை
விடையிலும் நீயில்லை பிறகு
எங்குதான் இருக்கிறாய்?

* * *

ஒரு குடிசைதான்!

எங்கள் குடிசைக்குள்
எந்தவொரு.... தச்சனின்
வியர்வைத் துளிகளோ...
எந்தவொரு தொழிலாளியின் இரத்தத்துளிகளோ....
உறிஞ்சப்படவில்லை!

எங்கள் குடிசைக்குள்
பணம் வைப்பதற்கென
எந்தவொரு பீரோக்களும்
இன்னும்
வாங்கப்படவில்லை!

எங்கள் குடிசைக்குள்
எந்தவொரு....
பணக்காரர்களும் வருவதேயில்லை
அதனால்தான்!
எங்கள் குடிசைக்குள்
பணக்காரர்களுக்கு...
இடமே.... இல்லை!

எங்கள் குடிசைக்குள்
நகர்வன, ஊர்வன
வராமல் தடுப்பதற்கு
எதுவித மறுப்புக்களுக்கும்
வாய்ப்பே இல்லை!



எங்கள் குடிசைக்குள்
ஆங்கில உணவுகள்
சமைப்பதில்லை....
ஏன்...
ஆங்கில.... உணவுகளுக்கு
இடமே.... இல்லை!

எங்கள் குடிசைக்குள்
வருபவர்கள் வெறுமனமே
திரும்பிச் செல்வதே இல்லை!

எங்கள் குடிசைக்குள்
எந்தவொரு... மரங்களையோ...விலங்குகளையோ
துன்புறுத்தி அமைக்கப்பட்ட
எந்தப் பொருட்களும்
இல்லவே... இல்லை!

எங்கள் குடிசைக்குள்
வெயிலும் மழையும்
வந்து இளைப்பாறிச்செல்ல
மட்டும் கூரைப் பகுதியைக்
கொடுப்போம்!



ஆனாலும் கூரை போதாது
உள்ளேயும் இடம் வேண்டுமெனத்
தவம் கிடந்து குடிசையை வரமாகப் பெற்று உள்ளே வந்து
மகிழ்ந்தாடும்
அந்த மழையும் வெயிலும்,
இதை.... நீங்கள்
நம்பப்போவதே இல்லை!

எங்கள் குடிசைக்குள்
சாமிக்கு இந்த அறை...
சமையலுக்கு இந்த அறை...
சாப்பாட்டுக்கு இந்த அறை...
படுக்கைக்கு இந்த அறை...
என்ற... பாகுபாட்டிற்கு
இடமேயில்லை....!

ஏனென்றால்
எல்லாவற்றிற்குமாக
எங்களிடம் இருப்பது
அறைகள் பிரிக்கவியலாத
ஒரே.... ஒரு குடிசைதான்.

-வெல்லவூர் சுபேதன்.
வெல்லாவெளி, மட்டக்களப்பு.

▽▽▽▽▽

எனதுச் சொல்வது...?


பத்தாம் தரத்தோடு
தன் படிப்பை
இடை நடுவே
நிறுத்திக் கொண்ட
தோழி ஒருத்தியை
என் பாடசாலை
செல்லும் வழியில்
காண நேர்ந்தது...

முச்சக்கர வண்டியில்
இளைஞன் ஒருவன்
புயங்களைப் பற்றிப்
பிடித்து ஏகாந்தமாய்
பயணிக்கும் போது
எனது தோற்பட்டைகளில் தொங்கவிடப்பட்ட
பையின் கனம்
கொஞ்சம்
அதிகரித்திருந்தது...

இழுத்து விடப்பட்ட
அழுத்தமான மூச்சோடு
முன்னோக்கி நகர
வேண்டியிருந்தது எனக்கு
காலமும் கனிந்து
என் கரங்களும் ஒருவன்
கைகளில் பிடித்துக் கொடுக்கப்பட்டது...

நாட்போக்கில்
குடும்பச் சுமைகளைக்காட்டிலும்
அந்த புத்தகப்பையின்
சுமை எத்தனை
ஏகாந்தமானதென
மனம் நெகிழ்ந்து
போனது...





இனி படித்து
பட்டம் முடித்து
வேலைக்குச் செல்லும்
தோழி ஒருத்திக்கு
கிடைத்த
ஒரு மணி நேரத்தை
என்னோடு கழிக்க நினைத்திருந்தால்
சந்தோசப்பட்டிருப்பேன்...

உடல் மெலிந்து
கலகலப்பின்றிப் போய்
கைக்குழந்தையை கையில் பிடித்தபடி
சொல்லிக் கொண்டிருந்தால்
வீட்டில் ஒற்றை உழைப்பில்
எத்தனை கோடி
மகிழ்ச்சியிருக்கும் அல்லவா? என்று
அவள் வார்த்தைகளில்
வாழ்க்கை மீதான அத்தனை சலிப்புகள்
இருந்தன...

எதைச் சொல்வது?
வாழ்தல் என்பது
யாருக்கும் எளிதல்ல
எப்படி இருப்பினும்
அப்படி ஏதேனும்
ஒரு சவாலுக்கு
முகம் கொடுத்துத்
தானேயாக வேண்டும்
என எண்ணிய படியே
அடுப்படிக்கும்
வாசற் கதவிற்கும்
இடையே விரைந்தோடியது
கால்கள்...

-மென்பனி
மட்டக்களப்பு.

மயங்கினாள் ஒரு மாது

மாது அவள் மனதை வென்ற
பல வண்ண நினைவலைகள்–அதில்
மனம் கவர்ந்து உறைய வைக்க
விரித்தாள் கவிதை எனும் வலைகள்


வான் நிலத்திலே வடிவமைந்த
பொன் நிற வட்ட நிலா
வண்ண மயில் இவளையே
அழகில் போட்டி போட வைத்த நிலா

பால் நிலவிலே பேதை உண்ட பாட்டி
ஊட்டிய பால் சோறு
பாவை அவள் அவை நினைக்க
ஏங்கித் தவிக்கிறது அவள் நேரு

மயங்கச் செய்யும் அம் மாதுவையும்
அவ் அந்தி மாலைப்பொழுதும்
மனம் இறுகியவளையும் இதப்படுத்தும்
செய்வதறியா மழலையின் சொற் பொழிவும்

பட்ட மரத்தின் மத்தியிலே
பசுமை கண்ட மதி–இதை
பார்த்த நொடி மயங்கும்
பவளக்கொடி இவளது மதி

நாவால் பாடி மனம் கவர்ந்த
மலர்ச் சோலையில் பாடும் குயில்
நாட்டிய தாரகை இவள் வியக்க
மழையில் ஆட்டம் போடும் மயில்



கவரி மான் இவள் அகம் கொண்ட
அரும்பு மீசைக் கள்வன்
காளை மேனி கொண்ட இவன்
ராதை இவள் கண்ட கண்ணன்

இரும்பகம் அவளையும் தேன்வாரி
பாடச்செய்யும் தென்றல் கீற்று
ஈரைந்து படை எதிர் வரினும்
தோற்காள் இந்
நினைவலையில் போவாள் தோற்று

மங்கை இவள் அகிலம் ஆண்ட வரை
மயங்கி இருந்தாள் வாழ்நாள் சிறை
மயங்கியவள் எழவில்லை இன்னும் -இம்
மண்ணில்அவள் வாழ்ந்த வரை.

-பு.கோ.சத்தியவதனி
முறாவோடை.



புத்துயிர் பெற்றெழுவாய்!

மாறும் மானிடனின் மனதைத் தேற்றவே
மனதில் ஈரம்கொண்டு மானிடம் போற்றவே
வாடும் பயிரினை நாளும் நயக்கவே
புத்துயிர் பெற்றெழுவாய் புதல்வனே!

புதுமைப் பொழிவினைப் புலரச் செய்யவே
புதிய உலகினை உணரச் செய்யவே
மண்ணின் மகிமையை மக்கள் அறியவே
வீறுடன் எழுவாய் வேந்தனே!

சீர்தமிழ் அதனைச் சிறகடிக்கச் செய்யவே
சிறப்பினை நாளும் உலகறியச் செய்யவே
பழந்தமிழ்ப் பெருமையைப் பாரார் அறியவே
குறையின்றி எழுவாய் குமரனே!

வீரமறவரின் விண்ணெட்டும் புகழ் மலையை
விரைவு காணும் புவனமும் உணரவே
செந்தமிழில் குறைவறச் செப்பிட நீயும்
சிறப்புடன் எழுவாய் செந்தமிழனே!

நறுமணம் கொண்டு நயம்தரும் நாயகனே
நாற்றிசையும் நலன் பெறுவாய் நன்மகனே
தாய் மண்ணின் தகைமையைப் பகன்றிடவே
உயிர்த் தெழுவாய் உதயசூரியனே!



–கிண்ணையூர்
தமிழாதினி கிந்துயா.

கவிதை

உண்மையின்

ஊற்று.

— காரிருளன்.



ISSN 3021-6680 Kavi Mulari Magazine